# சங்க கால
# கொங்கு நாணயங்கள்





முனைவர் இரா.கிருஷ்ணமூர்த்தி

Published by:

Garnet Publishers, 7/1&2, Cauvery Salai, Kalashetra Colony,
Besant Nagar, Chennai - 600 090. India.

2010
2nd Edition September 2011

Price: Rs.10

Printed at:

Arunaa Offset Printers, No.7/4, Neeli Veerasamy Street, Triplicane,
Chennai - 600 005.

கோ.அ.முருகவேல்

# சங்க கால கொங்கு நாணயங்கள்

## முனைவர் இரா.கிருஷ்ணமூர்த்தி

கொங்கு நாடு என்பது தற்கால கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம், திருப்பூர் மாவட்டம், சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம், கரூர் மாவட்டம் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு பகுதியையும் உட்பட்டதாகக் கொள்ளலாம்.

சங்ககாலச் சேரநாட்டில் கொங்குநாடுதான் முக்கிய பகுதியாக இருந்தது. தற்கால கேரளத்தில் பெரும்பகுதி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் அடர்ந்த காடாக இருந்திருக்க வேண்டும். பெரியாறு, கேரளத்தில் ஓடும் மிக முக்கியமான ஆறு. தொன்மைக்காலத்தில், பெரியாறு கடலுடன் கலக்கும் பகுதியில் முசிறி என்ற துறைமுகம் இருந்ததாகக் கூறப்படுகிறது. மேலைநாட்டு வணிகர்கள், கடல்வழியாக முசிறி வந்து, பிறகு பாலக்காடு கணவாயைக் கடந்து கரூர் வந்தடைந்தனர். சங்ககாலச் சேரர்களின் தலைநகர் கரூர். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக கரூர் அமராவதியாற்றில் கண்டெடுக்கப்பட்ட பல தொன்மையான நாணயங்களே இதற்கு சான்றாகும்.

கொங்கு நாட்டில் கிடைத்த நாணயங்களைக் குறித்து ஒரு பெரிய நூலே எழுதலாம். இச்சிறிய கட்டுரையில் கரூர் அமராவதியாற்றில் கிடைத்த சில முக்கிய சங்க கால நாணயங்களை மட்டும் வரலாற்றுப் பதிவிற்காகத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. கொங்கு நாட்டில் ரோமானிய நாணயப் புதையல்கள், வெள்ளலூர், அகிலாண்டபுரம், பூதிநத்தம், பொள்ளாச்சி, கோனேரிப்பட்டு, கரூர் ஆகிய ஊர்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ரோமானியர்கள் கொங்கு நாட்டிற்கு வருவதற்கு முன்பே, கிரேக்கர்கள் வாணிபம் செய்ய கரூர் வந்துள்ளனர். கி.மு., 2ம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க நாணயங்கள் கரூரில் கிடைத்துள்ளன.

**சங்ககாலச் சேரர் நாணயம்**

1986ம் ஆண்டில் முதன்முறையாகச் சங்ககாலச் சேரர் நாணயத்தைக் கரூரில் கண்டுபிடித்தேன். அதன் பின் சங்ககாலச் சேரர்களின் எழுத்துப் பொறிக்கப்பட்ட செப்பு, வெள்ளி நாணயங்கள் கிடைக்கத் தொடங்கின.

கீழே கூறப்பட்டுள்ள எல்லா நாணயங்களும் கரூர் அமராவதி ஆற்றில் கண்டெடுக்கப்பட்டவை.

**நாணயம்: 1**

*அளவு : 1.9 செ.மீ., X 1.8 செ.மீ.,*
*எடை : 7.7 கிராம்; செம்பு.*



முன்புறம் படம் 1 பின்புறம்

**முன்புறம்:** இடப்பக்கம், வளைந்த வடிவில் பாம்பின் வடிவம். அதற்கடுத்து வில் அம்பு; அதற்கடுத்துக் கோடரி, கோடரியின் கீழ் யானையின் உருவம் தெளிவாக இல்லை. இச்சின்னங்களின் ஊடே 'டவுரின்' என்றழைக்கப்படும் சின்னங்கள். நீரில் மீன் மிதப்பது போல் எல்லாப் பகுதிகளிலும் பரவிக் காணப்படுகிறது.

**பின்புறம்:** வில், அம்பு.

இவ்வகையான நாணயங்கள் தொன்மையான வெள்ளி முத்திரை நாணயங்களில் காணப்படும் சின்னங்களை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவை. இந்த நாணயங்களின் காலம் கி.மு., 2ம் நூற்றாண்டு.

***நாணயம்: 2***

***அளவு: 2 செ.மீ., X 2 செ.மீ.,***
***எடை : 9.9 கிராம்; செம்பு.***



முன்புறம் படம் 2 பின்புறம்

**முன்புறம்:** கீழ்பகுதி இடது ஓரம், வேலியிட்ட மரம். அதற்கடுத்து வலப்பக்கம் நோக்கி நின்று கொண்டிருக்கும் யானை; யானையின் தலைக்குமேல் ஆறு இதழ்களைக் கொண்ட பூப்போன்ற சின்னம்.

நாணயத்தின் தலைப்பகுதியில் இடமிருந்து, முதலில் ஆமை, அதனை அடுத்து மூன்று வளைவு கொண்ட முகடு. அதன்மேல் ஒரு பிறைச்சந்திரன். அதற்கு அடுத்துக் கொடிச் சின்னம். அதற்கு அடுத்துக் கோடரிச் சின்னம். அதற்கு அடுத்துச் சங்கு. மூன்று வளைவு முகட்டிற்குக் கீழ் ஏர் வடிவம்.

இந்த நாணயங்களில் காணப்படும் மூன்று வளைவு முகடும், அதன்மேல் பிறைச்சந்திரனும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. இச்சின்னம் மௌரிய அரசின் சின்னம் என்று கருதப்படுகிறது. இராம்பூர்வா என்ற இடத்தில் அசோகர் நிறுவிய தூணில், தூணையும் அதற்குமேல் வைக்கப்பட்டு இருந்த பெரிய சிங்க உருவத்தையும் இணைப்பதற்குப் பயன்பட்ட செப்பு ஆணி ஒன்று கிடைத்துள்ளது. அந்த ஆணியின் தலைப்பகுதியில், பிறையும் மூன்று வளைவு முகடும் கொண்ட சின்னம் பொறிக்கப்பட்டு இருந்ததால், அச்சின்னம் மௌரியரின் சின்னம் என்று உறுதிப்படுத்தப்பட்டது. சங்ககாலச்

சேரரின் இந்த நாணயங்களில் மௌரிய இலச்சினையைப் பதிந்து உள்ளமை, மௌரியர்களுடன் ஏற்பட்ட இறுகிய நட்பின் அடையாளமாக இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. மௌரியரின் ஆட்சிக்காலம் கி.மு., 320 முதல் கி.மு., 175 வரையிலான காலமாகும். இதனால் இந்த நாணயத்தின் காலத்தைக் கி.மு., 2ம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

***நாணயம்: 3***

***அளவு: 1.9 செ.மீ., X 1.7 செ.மீ.,***
***எடை 4.2 கிராம்; செம்பு.***



முன்புறம் படம் 3 பின்புறம்

***முன்புறம்:*** வலப்பக்கம் நோக்கி நின்று கொண்டிருக்கும் யானை. அதன் முன் திரிசூலம். யானையின் பின்புறத்தில் வேலியிட்ட மரம். யானையின் மேல் ஆறு வளைவுள்ள முகடு. அதன் அருகே மூன்று பக்கங்களையுடைய தோரணம்.

***பின்புறம்:*** வில் அம்புச் சின்னம். அதன் மேல் அங்குசம்.

சங்க காலச் சேரர்கள் சைவ மதத்தைப் பின்பற்றியவர்கள் என்று தெரிகிறது. இந்த நாணயத்தின் காலம் கி.மு., முதல் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

**நாணயம்: *4***

*அளவு 1.9 செ.மீ., X 1.7 செ.மீ.,*
*எடை: 3.1 கிராம்; செம்பு.*



முன்புறம் படம் *4* பின்புறம்

***முன்புறம்:*** வலப்பக்கம் நோக்கி நின்றுக் கொண்டிருக்கும் யானை. அதற்கு முன் திரிசூலம். யானைக்குப் பின் வேலியிட்ட மரத்தின் ஒரு பகுதி. யானையின் மேல் ஐந்து இலச்சினைகள். இடப்புறம் சுவஸ்திகை, அதற்கு அடுத்து சூரியன், திருவஸ்தம், காளை, கடைசியாக அடையாளம் தெரியாத ஒரு சின்னம்.

***பின்புறம்:*** வில், அம்பு மற்றும் அங்குசம்

இந்த நாணயத்தின் காலம் கி.மு., முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

நாணயம்: 5

அளவு: 1.6 செ.மீ., X 2.0 செ.மீ.,
எடை: 6.2 கிராம்; செம்பு



முன்புறம் படம் 5 பின்புறம்

**முன்புறம்:** வலப்பக்கம் நோக்கி நிற்கும் யானை. துதிக்கையை உயர்த்தி அது நிற்கிறது. யானையின் காலின் கீழ் இரண்டு மீன்கள் ஓடுவது போல் உள்ளது. யானையின் பின்புறம் வேலியிட்ட மரம். யானையின் மேல் நடுவில் நீள் சதுரத் தொட்டி ஒன்று உள்ளது. தொட்டியில் நான்கு மீன்கள் உள்ளன. வலப்பக்க ஓரத்தில் ஆறு வளைவுகள் உள்ள முகடு உள்ளது.

**பின்புறம்:** வில் அம்பு. அதனைச் சுற்றி ஆறு போன்ற சின்னம் உள்ளது. ஆற்றில் மீன்கள் மிதப்பது போல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தின் காலம், கி.மு., இரண்டு அல்லது முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

***நாணயம்: 6***

***அளவு: 2.0 செ.மீ., X 1.8 செ.மீ.,***
***எடை: 3.5 கிராம்; செம்பு.***



முன்புறம் படம் 6 பின்புறம்

**முன்புறம்:** இடப்பக்கம் நோக்கி யானை ஒன்று நின்று கொண்டிருக்கிறது. யானையின் எதிரே ஒரு சூலாயுதம், அதன் அருகே, ஒரு கம்பத்தில் மயில் அமர்ந்து கொண்டிருக்கிறது. யானையின் மேல் இடமிருந்து வலமாக, முதலில் திருவஸ்தம் இலச்சினை, அதனை அடுத்து ஒரு சக்கரம், ஒரு சங்கு, சூரியன், சுவஸ்திகை ஆகிய சின்னங்கள் உள்ளன.

**பின்புறம்:** வில், அம்பு அதன் மேல் ஒரு அங்குசம்.

இந்த நாணயத்தின் காலம், கி.மு., முதல் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

**நாணயம்:** *7*

**அளவு:** *1.8* **செ.மீ., X** *2.2* **செ.மீ.,**
**எடை:** *7.2* **கிராம்; செம்பு.**



முன்புறம் படம் 7 பின்புறம்

**முன்புறம்:** வலப்பக்கம் நோக்கி நிற்கும் யானை. அதன் எதிரே ஆறு வளைவுள்ள முகடு. யானையின் மேல் வில் அம்பு. அதன் அருகில் இடது பக்கத்தில் மூன்று 'டவுரின்' சின்னங்கள். வலது ஓரத்தில் அடையாளம் தெரியாத ஒரு சின்னம்.

**பின்புறம்:** வில், அம்பு.

இந்த நாணயத்தின் காலம், கி.மு., முதல் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

***நாணயம்: 8***

***அளவு: 1.8 செ.மீ., X 1.7 செ.மீ.,***
***எடை: 3.7 கிராம்; செம்பு.***



முன்புறம் படம் 8 பின்புறம்

**முன்புறம்:** வலப்பக்கம் நோக்கி நின்று கொண்டிருக்கும் யானை. யானையின் முன் ஒரு வேலியிட்ட மரம். யானையின் கீழ் பகுதியில் மற்றொரு வேலியிட்ட மரம். யானையின் பின் பகுதியில் நான்கு மீன்கள். இந்த நான்கு மீன்களுக்குக் கீழ் மற்றொரு மீன். யானையின் மேல் ஒரு சதுரத் தொட்டி. தொட்டியில் நான்கு கைகளுடைய அடையாளம் தெரியாத ஒரு சின்னம்.

**பின்புறம்:** முக்கோண வடிவில் வில், அம்பு சின்னம். அதன் அருகே ஓர் அங்குசம்.

இந்த நாணயத்தின் காலம், கி.மு., இரண்டு அல்லது முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

**நாணயம்:** *9*

**அளவு:** ***1.6* செ.மீ., X *1.9* செ.மீ., எடை: *6.2* கிராம்; செம்பு.**



முன்புறம் படம் *9* பின்புறம்

**முன்புறம்:** நாணயத்தின் கீழ் பகுதி மத்தியில் வலப்பக்கம் நோக்கி யானை நின்று கொண்டிருக்கிறது. இடப்பக்க மத்தியில் வில், அம்பு சின்னம். வலப்பக்க மத்தியில் கோடரியின் வெட்டும் பகுதி. இந்தச் சின்னங்களுக்கு இடையில் 'டவுரின்' சின்னங்கள்.

இந்த நாணயத்தின் காலம், கி.மு., இரண்டு அல்லது முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

**பின்புறம்:** வில், அம்பு.

**நாணயம்:** *10*

**அளவு:** ***2.1* செ.மீ., X *1.7* செ.மீ., எடை: *7.1* கிராம்; செம்பு.**



முன்புறம் படம் *10* பின்புறம்

**முன்புறம்:** வலப்பக்கம் நோக்கி நின்று கொண்டிருக்கும் யானை. யானையின் பின்னே வேலியிட்ட மரச்சின்னம். யானையின் முன்னே கீழ் பகுதியில், 'திருவஸ்தம்' சின்னம். யானையின் கீழ் ஓர் ஆறும், அதில் மீன்கள் ஓடுவது போன்றும் அமைக்கப்பட்டுள்ளன. யானையின் மேல் ஒரு தோரண சின்னம். வலப்பக்கம் மேல் பகுதியில் மூன்று வளைவு முகடு, அதன் மேல் பிறைச் சின்னம்.

**பின்புறம்:** வில், அம்பு. அம்பிற்கு இரு பக்கங்களிலும் 'டவுரின்' சின்னங்கள்.

இந்த நாணயத்தின் காலம், கி.மு., இரண்டு அல்லது முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

**நாணயம்: 11**

**அளவு: 1.8 செ.மீ., X 1.9 செ.மீ.,**
**எடை: 5.0 கிராம்; செம்பு.**



முன்புறம் படம் 11 பின்புறம்

**முன்புறம்:** கழுத்தில் அணிகலன் அணிந்த காளை. வலப்பக்கம் நோக்கி நிற்கிறது. காளையின் முன்னே திரிசூலம். காளையின் மேல் தெளிவற்ற சின்னங்கள்.

**பின்புறம்:** வில், அம்பு, அங்குசம்.

இந்த நாணயத்தின் காலம், கி.பி., முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

*நாணயம்: 12*

**கொல் இரும்புறையன் நாணயம்**

**நாணயத்தின் குறுக்களவு : 2.1 செ.மீ., எடை : 6.5 கிராம்; செம்பு.**



முன்புறம் படம் 12 பின்புறம்

**முன்புறம்:** ஒரு தோரணவாயில். வாயிலின் நடுவே ஒரு போர் வீரன். வீரன் அணிந்திருக்கும் குல்லா மேலைநாட்டுப் பாணியில் உள்ளது. இரு கைகளையும் இடுப்பில் வைத்திருக்கிறான். சுற்றி விளிம்பில் தமிழ்-பிராமி எழுத்து முறையில், 'கொல்இரும்புறைய்' என்று பொறிக்கப்பட்டுள்ளது. தோரணவாயில் அருகே வேலியிட்ட மரச்சின்னம்.

**பின்புறம்:** நாணயத்தின் அடிப்பகுதியில் வில்லும் அம்பும் காணப்படுகின்றன. இதன் அருகே இடப்பக்கத்தில் ஆறு வளைவு முகடு உள்ளது. வில்லின் அருகே வலப்பக்கத்தில் ஒரு சதுரத் தொட்டியும் அதில் இரண்டு மீன்களும் உள்ளன. நாணயத்தின் இடப்பக்கத்தின் மேல் பகுதியில் ஓர் ஆற்றின் கரை போன்ற கோடு உள்ளது. ஆற்றில் இணையாக இரண்டிரண்டு மீன்கள், ஒவ்வொன்றும் ஒன்றையொன்று பார்க்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நாணயத்தின் காலம், கி.பி., முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

**நாணயம்:** *13*

**கொல்லிப்புறை நாணயம்**

**நாணயத்தின் குறுக்களவு:** *1.5* **செ.மீ.,**

**எடை :** *2.5* **கிராம்; செம்பு.**



முன்புறம் படம் 13 பின்புறம்

**முன்புறம்:** ஒரு தோரணவாயில். வாயிலின் நடுவே ஒரு போர்வீரன். போர்வீரன் அணிந்திருக்கும் குல்லா மேலை நாட்டுப் பாணியில் உள்ளது. அவனது உடையும் அவ்வாறே உள்ளது. ஒரு கையில் வாளும், மறுகையில் கேடயமும் இருக்கின்றன. சுற்று விளிம்பில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் வழக்கிலிருந்த தமிழ்-பிராமி எழுத்து முறையில் 'கொல்லிப்புறை' என்னும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

**பின்புறம்:** வில்லும் அம்பும் நடுவில் காணப்படுகின்றன. இடப்பக்கம் மீன் சின்னங்களும், ஆமைச் சின்னமும் உள்ளன. வலப்பக்கத்தின் தலைப்பகுதியில் ஆறு வளைவுகள் கொண்ட முகடு. வில்லின் அருகே கீழ்ப்பகுதியில் வலப்புறமாக 'டவுரின்' இலச்சினை. ஆறு வளைவுகள் கொண்ட முகடிற்கும், டவுரின் இலச்சினைக்கும் இடையே, ஒரு சதுர வடிவ தொட்டி உள்ளது. இதற்குள் எவ்வித குறியீடும் இல்லை.

சங்கத்தமிழ் இலக்கியங்களில் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ள கொல்லிமலையின் காவலனான பொறையனின் நாணயம் இஃது என்பது தெரிகிறது. இலக்கியத்தில் தோன்றும் 'பொறை' என்னும் சொல் நாணயத்தில் 'புறை' என்று பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நாணயத்தின் காலம், கி.பி., முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

**நாணயம்: *14***
**மாக்கோதை நாணயம்**

**நாணயத்தின் குறுக்களவு : 1.7 செ.மீ.,**
**எடை : 2.280 கிராம்; வெள்ளி.**



முன்புறம் படம் 14 முன்புறம்

**முன்புறம்:** வலப்புறம் நோக்கிய அரசனின் மார்பளவுத் திருவுருவமும், காசின் தலைப் பகுதியில் தொன்மையான தமிழ்-பிராமி எழுத்தில் 'மாக்கோதை' என்ற சொற்றொடரும் பொறிக்கப்பட்டுள்ளன. மன்னனின் தலை முழுமையாக மழுக்கிய நிலையில் உள்ளது. நீண்ட மூக்கும், மேட்டு நெற்றியும் உள்ளன.

**பின்புறம்:** எந்தவிதச் சின்னமும் பொறிக்கப்படாமல் வழுவழுப்பாக உள்ளது.

ரோமானிய நாணயங்களில் காணப்படும் மன்னரின் தலை உருவத்தைப் போன்ற அமைப்பு இந்த நாணயத்தில் உள்ளது. கி.பி., முதல் நூற்றாண்டைச் சார்ந்த ரோமானியப் பேரரசர்களான அகஸ்டஸ், டைபீரியஸ் ஆகியோரது வெள்ளி காசுகள், கோவை அருகிலும், கரூரிலும் பெருமளவு கிடைத்துள்ளன. அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் அணிகலன்களே இல்லை. அதைப் போன்றே இந்த நாணயமும் அணிகலன்கள் இல்லாமல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தின் காலத்தை கி.பி., முதல் நூற்றாண்டு என்று கூறலாம்.

**நாணயம்: *15***
**குட்டுவன் கோதை நாணயம்**

***நாணயத்தின் குறுக்களவு : 1.9 செ.மீ.,***
***எடை : 2.3 கிராம்; வெள்ளி.***



முன்புறம் படம் *15* முன்புறம்

***முன்புறம்:*** வலப்பக்கம் நோக்கிய அரசனின் மார்பளவுத் திருவுருவம். நாணயத்தின் தலைப் பகுதியில் தொன்மையான தமிழ்-பிராமி எழுத்தில், 'குட்டுவன் கோதை' என்னும் சொற்றொடர் உள்ளது. இச்சொற்றொடரில் உள்ள ஐந்தாவது எழுத்தான 'ன்' தலைகீழாக பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நாணயத்திலும் மன்னன் தலை முழுமையாக மழுக்கிய நிலையில் உள்ளது. ரோமானிய பேரரசர்கள் அணிந்ததுபோல் கவசம் அணிந்திருக்கலாம். அகன்ற கண்ணும், நெடிய மூக்கும், தடித்த உதடும் தெளிவாகத் தெரிகின்றன. கழுத்தில் ஆடை காணப்படுகிறது.

**பின்புறம்:** எந்தச் சின்னமும் பொறிக்கப்படாமல் வழுவழுப்பாக உள்ளது.

இந்த நாணயத்தின் காலம் கி.பி., முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

8.1.2012



**எடை குறைவுள்ள சிறிய நாணயங்கள்:**

**நாணயம்:** *16*

**அளவு:** *9* **செ.மீ., X** *1* **செ.மீ., எடை:** *1.5* **கிராம்; செம்பு.**



முன்புறம் படம் 16 பின்புறம்

**முன்புறம்:** நாணயத்தின் வலப்பக்கத்தில் மூன்று வளைவு முகடு. அதன் உள்ளே 'டவுரின்' சின்னங்கள். இடப்பக்கம் அடிப்பகுதியில் யானையின் ஒரு பகுதி தெரிகின்றது. இடப்பக்கம் மேல் மூலையில் வில், அம்பு. இச்சின்னங்களுக்கு இடையில் 'டவுரின்' சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

**பின்புறம்:** வில், அம்பு.

இந்த நாணயத்தின் காலம், கி.மு., முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.

**நாணயம்:** *17*

**அளவு:** *1.2* **செ.மீ., X** *1.0* **செ.மீ., எடை:** *1.0* **கிராம்; செம்பு.**



முன்புறம் படம் 17 பின்புறம்

**முன்புறம்:** வலப்பக்கம் நோக்கி ஒரு குதிரை நின்று கொண்டிருக்கிறது. அதன் எதிரே வேலைபாடுடன் ஒரு தூண். தூணின் மேல் ஒரு தட்டு உள்ளது.

**பின்புறம்:** வில், அம்பு.

இந்த நாணயத்தின் காலம், கி.பி., முதல் நூற்றாண்டாக இருக்கலாம்.
இந்திய அளவில் மிகத் தொன்மையான நாணயங்கள் வெள்ளி முத்திரை நாணயங்களே. அதன் காலம் கி.மு., 5ம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பமாவதாக நாணயவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். சங்க காலத்தில் பாண்டியர்களே வெள்ளி முத்திரை நாணயங்கள் வெளியிட்டுள்ளனர். சேரர்களோ, சோழர்களோ, வெள்ளி முத்திரை நாணயங்கள் வெளியிட்டதற்கான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை.

சேரர்கள் அதிகளவில் செப்பு நாணயங்கள் வெளியிட்டுள்ளனர் என்பதற்கு இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களே சான்றாகும். சங்க கால சேரர்கள் ஆண்ட பகுதிகளில் வாணிபம் சிறப்பாக இருந்திருக்கிறது. இதுவரை கிடைத்த நாணயங்களே அதற்குச் சான்று.

## பார்வையிட்ட நூல்கள்


1. R.KRISHNAMURTHY, *Sangam Age Tamil Coins*, Garnet Publications, Chennai-90. (For Coins 1 to 11 and from 14 to 17)

2. டாக்டர் இரா.நாகசாமி, சங்கச் சேரலன் ஈந்த கவின்மிகு காசு, தினமணி, சென்னை, *15.11.1987. (நாணயம் எண்: 12.)*

3. தினமணி, சென்னை, *17.11.1989. (நாணயம் எண்: 13)*


---

**கோவையில் 2010 ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டினையொட்டி சக்தி குழும நிறுவனங்கள் சார்பில் பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி வெளியிட்ட 'வளமார் கொங்கு வரலாறும் பண்பாடும்' என்ற சிறப்பு மலரில் 'கொங்கு நாணயங்கள்' என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரை கொங்கு நாட்டில் கிடைத்தச் சங்க கால நாணயங்களைப் பற்றியதாகும். அதன் அடிப்படையில் இந்த சிறு நூலின் தலைப்பு 'சங்க கால கொங்கு நாணயங்கள்' என்று மாற்றப்பட்டுள்ளது.**

---


**முனைவர் இரா.கிருஷ்ணமூர்த்தி,**
**ஆசிரியர்,**
**தினமலர்,**
**219, அண்ணாசாலை,**
**சென்னை 600 002.**

## THE AUTHOR:



Ramasubbu Krishnamurthy (b.1933) has the distinction of obtaining the first rank in Geology in the graduate and post-graduate level. He is a member of professional bodies devoted to numismatics and epigraphy. He had presented papers in international and national conferences. He attended XIV International Numismatic Congress held at Glasgow and presented a paper based on his book on *Chinese Coins from Tamil Nadu* (2009). He has to his credit seven books on epigraphy, palaeography and numismatics, in Tamil. His other books, in English, on numismatics are: *Late Roman Copper Coins from South India: Karur and Madurai* (1994), *Sangam Age Tamil Coins* (1997, reprint 2003), *Non-Roman Ancient and Foreign Coins from Karur in India* (2000), *The Pallava Coins* (2004), *Late Roman Copper Coins from South India: Karur, Madurai and Tirukkoilur* (2007, enlarged edition) and *Ancient Greek and Phoenician Coins from Karur, Tamil Nadu, India* (2009, revised and edited edition of 2000), *Chinese Coins from Tamil Nadu* (2009).

Krishnamurthy is the recipient of many honours for his contribution to numismatics, Tamil script reform and journalism. He was awarded the prestigious 'Biddulph' and 'Desikachari' medals by the Numismatic Society of India (NSI) for his discoveries of ancient Tamil Coins with Tamil-Brahmi legend. He had the honour to preside over the annual conferences of NSI (1996) and South Indian Numismatic Society (1999).

He is a Fellow of the Royal Numismatic Society, London. He is the President of Tamil Nadu Numismatic Society and South Indian Numismatic Society and former Vice President of the NSI. The Madurai Kamaraj University conferred on him the degree of Doctor of Science (*honoris causa*) in 2004 for his contribution to Tamil epigraphy and numismatics. He is the Editor of *Dinamalar*, a mass circulated Tamil daily, published from several centres. He was the General Secretary of All India Newspaper Editors, Conference (1991 - 1996). Krishnamurthy is a widely travelled scholar - journalist.

He visited U.S.S.R. (1979), U.S.A. (1981) and West Germany (1982) on invitation from the respective Governments. As one of the members of the Indian print media group he had gone to several countries in Europe and Asia and also to U.S.A., besides travelling to Europe to participate in numismatic conferences and to South East Asian countries to visit Museums.

531